## ஆகஸ்ட்– 01 – புதன்

### புனித அல்போன்ஸ் லிகோரி

### “உன்னை விடுவிக்கவும் காக்கவும் நான் உன்னோடு இருக்கிறேன்” (ஏரே 15:20)

**முதல் வாசகம்: ஏரேமியா15: 10,16–21**

நாடெங்கும் சண்டை சச்சரவுக்குக் காரணமான என்னைப் பெற்றெடுத்த என்தாயே, எனக்கு ஐயோகேடு! நான் கடன் கொடுக்கவும் இல்லை.கடன் வாங்கியதுமில்லை. எனினும் எல்லாரும் என்னைச்சபிக்கிறார்கள்.நான் உம்சொற்களைக் கண்டடைந்தேன் அவற்றை உட்கொண்டேன் உன்சொற்கள் எனக்கு மகிழ்ச்சி தந்தன் என் உள்ளத்திற்கு உவகை அளித்தன. ஏனெனில் படைகளின் ஆண்டவரே, உம்பெயரே எனக்கு வழங்கலாயிற்று. களியாட்டக் கூட்டங்களில் அமர்ந்து நான் மகிழ்ச்சி கொண்டாடவில்லை. உம் கை என்மேல் இருந்ததால் நான் தனியனாய் இருந்தேன். சினத்தால் நீர் என்னை நிரப்பியிருந்தீர்.எனக்கு ஏன் தீராதவேதனை? குணமாகாக் கொடிய காயம்?நீர் எனக்குக் கானல் நீரென, ஏமாற்றும் ஓடையென ஆகிவிட்டீரோ! எனவே, ஆண்டவர் கூறுவது இதுவே் ”நீ திரும்பி வந்தால் நான் உன்னை முன்னைய நிலைக்குக்கொண்டு வருவேன். என்முன் வந்துநிற்பாய் பயனில் நீக்கிப்பயனுள பேசின், நீ என் இறைவாக்கினனாக இருப்பாய். அவர்கள் உன்னிடம் திரும்பிவருவார்கள் நீ அவர்களிடம் திரும்ப வேண்டாம்.நான் உன்னை அவர்கள்முன் வலிமை வாய்ந்த வெண்கலச் சுவராக்குவேன் அவர்கள் உனக்கு எதிராய்ப் போராடுவார்கள் ஆனால், உன்மேல் வெற்றி கொள்ள மாட்டார்கள் ஏனெனில் உன்னை விடுவிக்கவும் காக்கவும் நான் உன்னோடு இருக்கிறேன், என்கிறார் ஆண்டவர்.தீயோரின் கையினின்று நான் உன்னைக் காப்பேன் முரடரின் பிடியினின்று உன்னை மீட்பேன்.”

**பதில்பாடல் :** நெருக்கடி வேளைகளில் எனக்கு அரனும்
அடைக்கலமும் நீரே.

**நற்செய்தி : மத்தேயு 13 : 43 – 46**

அக்காலத்தில் இயேசு மக்களை நோக்கிக் கூறியதாவது : ”ஒருவர் நிலத்தில் மறைந்திருந்த புதையல் ஒன்றைக் கண்டுபிடிக்கிறார். அவர் அதை மூடி மறைத்துவிட்டு மகிழ்ச்சியுடன் போய்த் தமக்குள்ள யாவற்றையும் விற்று அந்தநிலத்தை வாங்கிக்கொள்கிறார். விண்ணரசு இப்புதையலுக்கு ஒப்பாகும். ”வணிகர் ஒருவர் நல்முத்துகளைத் தேடிச்செல்கிறார். விலை உயர்ந்த ஒருமுத்தைக் கண்டவுடன் அவர் போய்த் தமக்குள் யாவற்றையும் விற்று அதை வாங்கிக்கொள்கிறார். விண்ணரசு அந்நிகழ்ச்சிக்கு ஒப்பாகும்” என்றார்.

**தியானம்:** விண்ணரசு என்பது விலைமதிப்புள்ளதாக, உயர்வானதாக இருக்கின்றது என்பதனை யேசு இன்றைய நற்செய்தி மூலம் எமக்கு வெளிப்படுத்துகின்றார். ஒரு வைர வியாபாரிக்கு வைரத்தின் தரமும், பெறுமதியும் தெரியும். அதேபோல் முத்து வியாபாரிக்கு முத்தின் தரமும், பெறுமதியும் தெரியும். ஆனால் நாம் வைரம், முத்து என்றவுடன் விலைமதிப்புள்ளது, அதனை வாங்குவது கடினம் என்று நினைப்போம். ஒரே பொருள் வெவ்வேறான பார்வையும் அர்த்தமும் கொண்டுள்ளது. விண்ணரசை பற்றிய பார்வையும் எதிர் நோக்கும் பல்வேறு வகையான அர்த்தத்தையும், விளக்கத்தையும் நமக்கு ஏற்படுத்துகிறது. அதனை அடைய நாம் முயற்சி எடுக்க வேண்டும் என்பதே யேசுவின் விருப்பம். அதனை அடையும் வழியைக் காட்டவே யேசு மனிதன் ஆனார். ஆனால் நாம் இன்று வாழுகின்ற வாழ்க்கை நம்மை விண்ணரசிற்கு அழைத்து செல்லுமா? முதல் வாசகத்தில் கடவுளின் செய்தியை அறிவித்த எரேமியா மக்களால் துன்புறுத்தப்பட்டதால் கடவுளை நோக்கி கூக்குரல் இடுகின்றார். இந்த உலகும் நல்லவர்களை அழிக்கின்றது. , உண்மையைக் கூறுபவர்களின் குரல்வளையை நசுக்குகின்றது. நீதியை நிலைநாட்ட நினைப்பவர்களை ஒழிக்கின்றது. நீதி நேர்மை என்பதெல்லாம் வெறும் பேச்சளவில் மட்டுமே உண்மையாகவும் நடைமுறையில் உண்மை இல்லை என்ற நிலையும் உருவாகியுள்ளது. இவ்வாறான சூழலில் நாம் நமது வாழ்வை கடவுளுக்கு ஏற்றதாக மாற்றி அமைப்பது இன்று நமக்கிருக்கும் மிகப்பெரிய சவால். அதனை வெற்றிகொள்ள இறை அருளை வேண்டுவோம்.